**மாவட்ட உரிமையில் நீதிமன்றம், சத்தியமங்கலம்.**
**முன்னிலை: திரு.எஸ்.சந்திரசேகரன், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்.**
**2016-வருடம் அக்டோபர் மாதம் 21-ம் நாள் வெள்ளிக்கிழமை**
**2047 திருவள்ளுவராண்டு ஸ்ரீதுர்முகி வருடம் ஐப்பசி மாதம் 05-ம் நாள்**
**அ.வ.எண்.94/2016**

1. கே.பி.பொன்னுசாமி,
2. கே.பி.நடராஜன். ... வாதி

/எதிர்/

1. திம்மக்காள்,
2. மல்லக்காள்,
3. சின்னமல்லக்காள்,
4. கண்மணி,
5. பழனியம்மாள்,
6. கவிதா,
7. சுகுணா,
8. தமிழ் செல்வி,
9. சந்திரசேகரன். ... பிரதிவாதி

WEB COPY

இந்த வழக்கு கடந்த 06.10.2016-ம் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபொழுது வாதி தரப்பில் திரு.S.A.முகமது முபராக், வழக்குரைஞர் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.U.K.காணிவேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு பிரதிவாதிகள் வழக்கு விசாரணையில் பங்கேற்றிருக்காததால், வழக்கில் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இது நாள் வரையில் எமது ஆய்விலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:-

## <u>தீர்ப்புரை</u>

சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2184/2002-ன் பதிவாகியிருக்கும் 08.07.2002 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக் கோரியும், 2 முதல் 9 பிரதிவாதிகள் தாவாச் சொத்தை உரிமை மாற்றம் செய்யவோ அல்லது அதில் கட்டுமானம் செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்க கோரியும் மற்றும் வழக்கு செலவு தொகைக்கும் தாவா.

1. வாதிகள், தாவாச் சொத்து, ஆதியில் சின்னமாரநாயக்கர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்ததாகவும், அவருக்கு பெரியமாரநாயக்கர் மற்றும் சின்னமாரநாயக்கர் என்ற இரு மகன்கள் என்றும், தாங்கள் பெரியமாரநாயக்கரின் வாரிசுகள் என்றும் 1 முதல் 7 பிரதிவாதிகள் சின்னமாரநாயக்கரின் வாரிசுகள் என்றும், 8 மற்றும் 9 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதியின் மகள் ராணியின் வாரிசுகள் என்றும், தங்களின் பாட்டானரான சின்னமாரநாயக்கரும், அவருடைய வாரிசுகளும் 27.08.1954 தேதியில் சொத்துக்களை பிரித்துக் கொண்டதன் அடிப்படையில், சின்னமாரநாயக்கருக்கு "A" அட்டவணையில் ஒதுக்கப்பட்ட சொத்தை, 14.01.1957 தேதியில் வாதிகளின் மூத்த சகோதரர் மல்லநாயக்கர் என்பவருக்கு சேர வேண்டுமெனவும், அதுவரை தங்களின் தகப்பனார் பெரியமாரநாயக்கர் அனுபவிப்பார் என்றும் உயில் எழுதிய பிறகு, தங்களுடைய பாட்டனார் சின்னமாரநாயக்கர் இறந்துவிட்டதால், தங்களுடைய தகப்பனார் அந்த சொத்தை அனுபவித்து வந்ததாகவும், மல்லநாயக்கர் உரிமை வயதை அடையாமலேயே 05.08.1957 தேதியில் தாயார் மாரக்காளை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், மாரக்காளும் கடந்த 29.10.1968 தேதியில் இறந்த பிறகு, தங்களுடைய தகப்பனார் தங்களை மட்டும் வாரிசுகளாக விட்டுவிட்டு 29.01.1975 தேதியில் இறந்துவிட்டதாகவும், தங்களுடைய சித்தப்பா சின்னமாரநாயக்கருக்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்களை விற்பனை செய்துவிட்டதாகவும், ஆனால், 1-ம் பிரதிவாதி, தாவாச் சொத்தின் அனுபவித்தில் இடையூறு செய்ததால், தாங்கள் அ.வ.எண்.594/1985 வழக்கையும், 1-ம் பிரதிவாதி, அ.வ.எண்.641/1985 வழக்கையும் தாக்கல் செய்த பிறகு ஏற்பட்ட சமரசத்தின்படி அந்த அ.வ.எண்.641/1985 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், அ.வ.எண்.594/1985 வழக்கு 06.11.1985 தேதியில் சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும், அந்த சமரசத்தின்படி, 1-ம் பிரதிவாதி இறக்கும் வரை தாவா சொத்தை அனுபவித்து வரவேண்டுமென்றும், அவருக்கு பிறகு, அவருடைய 4 மகள்களுக்கு திருமணம் நடக்காமல் இருந்தால் அவர்கள் காலம் வரை அவர்கள் அனுபவித்து வரவேண்டுமென்றும், அதற்கு பிறகு, சொத்து வாதிகளுக்கு சேர வேண்டுமென்றும் ஒப்புக் கொண்டிருந்தும், கடந்த 05.01.2016 தேதியில் 2 முதல் 9 பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் வீடு கட்ட முயற்சி செய்ததை பற்றிக் கேட்ட போது, 1-ம் பிரதிவாதி தாவா சொத்தை தானம் கொடுத்துவிட்டதாக குறிப்பிட்டதாகவும், சமரச தீர்ப்பாணைக்கு முரண்பட்டு, தானம் கொடுக்க 1-ம் பிரதிவாதிக்கு உரிமையே இல்லையென்பதால், 08.07.2002 தேதியில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை சட்டப்படி இல்லாநிலையது என்று விளம்புகை செய்ய வேண்டுமென்றும், 1-ம் பிரதிவாதியின் மகள்களுக்கு திருமணமாகி விட்டதால், தாவாச் சொத்தில் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தை உபயவாதிகளோ, அவரது ஆட்களோ இடையூறு செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரத்தை பிறப்பிக்க வேண்டுமென்றும்

WEB COPY

வாதுரைத்தும், 1-ம் வாதி, வா.சா.1 ஆக சான்றுரைத்தும், வா.சா.ஆ.1 முதல் 11சான்றாவணங்களை குறியிட்டுமிருக்கிறார்கள்.

2. பிரதிவாதிகள், அசல் வழக்கில் அழைப்பாணையை பெற்றுக் கொண்டு, வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தும், பதிலுரை தாக்கல் செய்திருக்காததால் ஒருதலைபட்ச உத்தரவிற்குள்ளாக்கப்பட்ட நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் 11 சான்றாவணங்களையும், வா.சா.1-ன் வாய்மொழி சாட்சியத்தையும் குறிப்பாக வா.சா.ஆ.7 மற்றும் 8-யும் பரிசீலிக்கையில், தாவாச் சொத்தைப் பொறுத்து வாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதிக்கிடையே வாதிகள் குறிப்பிட்டதை போல சமரசம் ஏற்பட்டு, சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரமும், அதனடிப்படையிலேயே 1-ம் பிரதிவாதி, தாவாச் சொத்தின் அனுபவித்தில் இருந்து வந்திருக்கிறார் என்ற விபரமும் தெளிவாகிறது. மேற்படி சமரச தீர்ப்பாணையின் ஷரத்துக்களுக்கு முரண்பட்டு, 1-ம் பிரதிவாதி, வா.சா.ஆ9 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்திருக்கிறார். வா.சா.ஆ.7-ன்படி, தாவாச் சொத்தில் 1-ம் பிரதிவாதிக்கு அனுபவ பாத்தியம் மட்டுமே இருக்கும் நிலையில், அச்சொத்தை அவர் உரிமை மாற்றம் செய்திருப்பது தவறானது. 1-ம் பிரதிவாதி, 08.07.2002 தேதியில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் செய்த உரிமை மாற்றத்தை, வாதிகள் , 20.04.2016 தேதியில் தாக்கல் செய்த இவ்வழக்கில் ஆட்சேபணை செய்ய முடியுமா? என்று பார்க்கும் பொழுது, மேற்படி ஆவணத்தை பற்றிய விபரம் தங்களுக்கு 05.01.2016 தேதியில்தான் தெரியவந்தது என வாதிகள் குறிப்பிட்டிருப்பதை நம்பதக்கதற்றதாக்கும் வகையில் எவ்வித சாட்சியங்களையும் முன்னிறுத்தி பிரதிவாதிகள் எதிர்வழக்காடியிருக்காத நிலையில், அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தைப் பற்றி 05.01.2016 தேதியில்தான் தங்களுக்கு தெரியவந்ததாக வாதிகள் வழக்காடிய சங்கதிகளை பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டிருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுவதால், வா.சா.ஆ.7-ன்படி ஏற்பட்ட உரிமை மாற்றத்தை 05.01.2016 தேதியிலிருந்து 3 வருடத்திற்குள்ளாக ஆட்சேபணை செய்ய வாதிகளுக்கு உரிமையுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், வாதியின் வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, 1-ம் பிரதிவாதி, உரிமையேயில்லாமல் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.9 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கோர வாதிகளுக்கு உரிமையிருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், 1-ம் பிரதிவாதியின் மகள்களுக்கு திருமணம் நடந்துவிட்டதாக வாதிகள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டிருந்தும், அந்த மகள்களும், அவர்களுடைய வாரிசுகளும் இவ்வழக்கில் தரப்பினர்களாக இருந்தும், அச்சங்கதியை ஆட்சேபிக்கும் வகையில் எதிர்வழக்காடாமல் இருப்பதால், வாதிகள் வா.சா.ஆ.7-ன்படி தாவாச் சொத்தின் சுவாதீனத்தைப் பெற்று, அனுபவித்தில் வைத்துள்ளார்கள் என்றும் தெளிவாகிறது. ஆகவே, வாதிகள் கோரியபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பெற அருகதையுடையவர்கள் என்று முடிவு செய்யப்படுகிறது.

WEB COPY

**முடிவில்,**

சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2184/2002-ல் பதிவாகியிருக்கும் 08.07.2002 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது (null and void) என்று விளம்புகை செய்தும், 2 முதல் 9 பிரதிவாதிகள் தாவாச் சொத்தை உரிமை மாற்றம் செய்யவோ, அதில் கட்டுமானம் செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் வரி வடிவாக்கப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2016-ம் வருடம் அக்டோபர் மாதம் 21-ம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

(S/d.S.Chandrasekaran)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சத்தியமங்கலம்.**

WEB COPY

**வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

வா.சா.1 திரு.கே.பி.பொன்னுசாமி (1-ம் வாதி)

**பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:- - இல்லை -**

**வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.08.1954 | பாகப்பிரிவினை பத்திரம் | ... | (பதிவு நகல்) |
| வா.சா.ஆ.2 | 14.01.1957 | உயில் சாசனம் | ... | (பதிவு நகல்) |
| வா.சா.ஆ.3 | 20.04.1957 | இறப்பு சான்று | ... | (உண்மை நகல்) |
| வா.சா.ஆ.4 | 05.08.1957 | இறப்பு சான்று | ... | (உண்மை நகல்) |
| வா.சா.ஆ.5 | 29.10.1968 | இறப்பு சான்று | ... | (உண்மை நகல்) |
| வா.சா.ஆ.6 | 29.01.1975 | இறப்பு சான்று | ... | (உண்மை நகல்) |
| வா.சா.ஆ.7 | -------------- | இ.ம.எண்.2344/85 inஅ.வ.எண்.594/85 | ... | (சான்று நகல்) |
| வா.சா.ஆ.8 | -------------- | மே.மு.எண்.594/1985-ன் பதிவேடு | ... | (சான்று நகல்) |
| வா.சா.ஆ.9 | 08.07.2002 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | ... | (பதிவு நகல்) |

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.ஆ.10 | 02.04.2016 | பட்டா-பட்டா எண்.526 | ... | (கணினி நகல்) |
| வா.சா.ஆ.11 | 02.04.2016 | "அ" பதிவேடு | ... | (கணினி நகல்) |

**பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:- - இல்லை-**

(S/d.S.Chandrasekaran)
**மா.உ.நீ.,**
**சத்தி.**

WEB COPY